நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

48—

பாதாள சாக்கடைத் திட்டம்

***35777—திரு. C.V. சேகர்:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பட்டுக்கோட்டை நகரில் பாதாள சாக்கடைத் திட்டத்தினைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பட்டுக்கோட்டை நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றாக கசடு கழிவுநீர் மேலாண்மைத் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர் அவர்கள்.

முற்பகல் 10–25

திரு. C.V. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாய் 8 அடி பாய்ந்தால் குட்டி 16 அடி பாயும் என்பார்கள். அந்த வகையிலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உயிரோடு இருந்திருந்தால், அவர்களே வியந்து பார்க்கும் அளவுக்கு இன்றைக்கு நல்லாட்சி நடத்திவரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) காவேரி டெல்டா பகுதிகளை பாதுகாக்கப்பட்ட வேளாண்மை மண்டலமாக அறிவித்தமைக்கு காவேரி டெல்டா பகுதி மக்கள்

2020 பிப்ரவரி 19]

சார்பிலே எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆலுக்கு விழுதாய் இந்த நல்லாட்சிக்குத் துணை நிற்கும் மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களையும் வணங்கி, என் கேள்வியைத் துவக்குகிறேன்.

பட்டுக்கோட்டை நகராட்சி, 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி, சுமார் 70,000 மக்கள்தொகை கொண்ட நகராட்சியாக இருந்துவந்தது. இன்றைக்கு ஒரு இலட்சம் மக்கள்தொகை கொண்ட நகராட்சியாக வளர்ந்திருக்கின்றது. இந்த நிலையில் கசடு கழிவுநீர் மேலாண்மைத் திட்டம் அமலில் இருந்தாலும், அது போதாது என்ற வகையிலே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்து, இந்த நகராட்சிக்கு பாதாள சாக்கடைத் திட்டத்தைக் கொண்டுவருவாரா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பட்டுக்கோட்டை நகராட்சி தேர்வுநிலை நகராட்சி ஆகும். இந்நகராட்சி 21.83 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில் 32 வார்டுகளைக் கொண்டுள்ளது. இந்த நகராட்சியின் மக்கள்தொகை 2011 ஆம் ஆண்டு மக்கள்தொகை கணக்கெடுப்பின்படி 73,097 ஆகும். பட்டுக்கோட்டை நகராட்சியில் சாலைகளின் மொத்த நீளம் 94.53 கிலோ மீட்டர் ஆகும். நகராட்சி எல்லைக்குள் நெடுஞ்சாலைத் துறைமூலம் பராமரிக்கப்படும் சாலைகளின் நீளம் 20.08 கிலோ மீட்டர் ஆகும். பட்டுக்கோட்டை நகராட்சியில் தற்போதுள்ள மக்கள்தொகை மற்றும் வெளியேறும் கழிவுநீர் அடிப்படையில் பாதாள சாக்கடைத் திட்டம் அமைப்பது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. பட்டுக்கோட்டை நகராட்சியின் மக்கள்தொகை ஒரு இலட்சத்திற்கும் குறைவாக உள்ள காரணத்தினால், பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு மாற்றாக, கசடு கழிவுநீர் மேலாண்மைத் திட்டத்தைச் செயல்படுத்த முடிவு செய்யப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இந்நகராட்சியில் கழிவுநீர் சேகரிப்பு தொட்டிகளிலிருந்து தினசரி 30,000 லிட்டர் அளவில் கழிவுநீர் சேகரம் ஆகிறது. அவ்வாறு சேகரமாகும் கழிவு நீரை லாரியில் எடுத்துச் சென்று சுத்திகரிக்க நகராட்சிக்குச் சொந்தமான நைனாங்குளம் உரக் கிடங்கில் 3.60 கோடி ரூபாய்*

மதிப்பீட்டில் கசடு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க பணி ஆணை வழங்கப்பட்டு, பணிகள் நடைபெற்று வருகின்றன. இதுவரை 27 சதவிகித பணிகள் முடிவடைந்துள்ளன. இப்பணிகள் வரும் மே மாதத்திற்குள் முடிவடைந்து, சுத்திகரிக்கப்பட்ட கழிவு நீர் விவசாயப் பயன்பாட்டுக்கு வழங்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு கோரிக்கை வைத்தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, நகரப் பகுதிகளிலெல்லாம் பாதாள சாக்கடைத் திட்டம் அமைக்க வேண்டுமென்று கொள்கை முடிவெடுத்து செயல்படுத்தி வருகிறது. இந்த நிலையில், பேரூராட்சி, நகராட்சிகளில் எல்லாம் சுத்திகரிப்பு நிலையங்கள் அமைப்பதற்கு இடம் கிடைப்பதில் பல்வேறு பிரச்சினைகள் உள்ளன. சுத்திகரிப்பு நிலையம் அமைப்பதற்கு எங்கே போனாலும் இடம் கொடுக்காமல், வழக்குகள் போடுகிறார்கள். இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டுதான் மக்கள்தொகை குறைவாக இருக்கின்ற இடங்களிலெல்லாம் இப்படியொரு திட்டத்தை மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடியார் அவர்கள் கொண்டுவந்தார்கள். மாண்புமிகு அம்மாவின் அரசால் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டுவிட்டது. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, எதிர்காலத்தில் ஒரு இலட்சத்திற்கும்மேல் மக்கள்தொகை வருகின்றபட்சத்தில், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கண்டிப்பாக எடுத்துச்சென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. C.V. சேகர் அவர்கள்.

திரு. C.V. சேகர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்காலத்தில் மக்கள்தொகையைக் கருத்தில்கொண்டு பரிசீலனை செய்யப்படும் என்று சொன்ன மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதிராமபட்டிணம், மதுக்கூர் போன்றவை வளர்ந்துவரும் பேரூராட்சிகளாகும். இந்த இரு பேரூராட்சிகளிலும் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

2020 பிப்ரவரி 19]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திரும்பவும் பாதாள சாக்கடைத் திட்டத்தைக் கேட்கிறார். கசடு கழிவுநீர் மேலாண்மைத் திட்டம், மாற்றுத் திட்டமாக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. ஒரு இலட்சம் மக்கள் தொகைக்குக் குறைவான மக்கள்தொகை உள்ள பேரூராட்சி, நகராட்சிகளில் படிப்படியாக எடுத்துக்கொள்ளப்படும். கண்டிப்பாக வருகின்ற காலத்திலே நிதிநிலைமையை அனுசரித்து, வாய்ப்புகள் இருப்பின், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் மேலான கவனத்திற்குக் கொண்டுசென்று பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்.*

திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆலந்தூர் தொகுதியில் ஆதம்பாக்கம், நிலமங்கை நகர் என்ற பகுதியில் 24* MLD *கொள்ளளவு கொண்ட கழிவுநீர் அகற்றும் நிலையம் உள்ளது. புதிய குடியிருப்புகள் வந்ததாலும், போதிய திறன் வசதி இல்லாத காரணத்தினாலும், மழைக் காலங்களில் கழிவுநீர் வெளியேற்றப்படாமல் கிட்டத்தட்ட ஐந்தாயிரம், ஆறாயிரம் வீடுகளுக்குள்ளேயே கழிவுநீர் தேங்கி, மக்கள் சிரமப்படும் நிலைமைகள் குறித்து நம்முடைய மாமன்றத்தில் தெரிவித்து, பலமுறை கோரிக்கை வைத்துள்ளேன். அரசு 25.50 கோடி ரூபாய் மதிப்பீட்டில் ஒரு திட்டத்தை உருவாக்கி, அங்கே மேலும் 10* MLD *திறன்கொண்ட கழிவுநீர் அகற்றும் நிலையத்தை அமைக்க வேண்டுமென்று உத்தரவிட்டது. டெண்டர் விட்டு, பணிகளையும் தொடங்கினார்கள். அப்போது, அந்தப் பகுதியிலிருந்த சிலர், அங்கு கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கக் கூடாது என்று கோரி நீதிமன்றத்திற்குச் சென்றார்கள். ஆனால், அதே இடத்தில் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்க வேண்டும் என்று நீதிமன்றத்தால் உத்தரவிடப்பட்டு 6 மாத காலம் ஆகியும், இதுவரை அந்தப் பணிகள் தொடங்கப்படவில்லை. ஆகவே, வருகின்ற மழைக் காலத்திற்குள்ளாக அந்தப் பணிகளை முழுமையாக முடித்து, பொது மக்கள் பயன்படுத்துகிற அளவுக்கு அந்தத் திட்டத்தைச்*

செயல்பாட்டிற்குக் கொண்டு வர மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் இதற்கு முன்பு பதிலளித்த subject குறித்துதான் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தற்போது கேட்டிருக்கிறார்கள். கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கின்றபோது, சம்பந்தப்பட்ட பகுதியிலுள்ள மக்கள், அங்கு சுத்திகரிப்பு நிலையம் அமைக்கக் கூடாது என்று நீதிமன்றத்தை நாடும் ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனினும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அரசுக்கு சாதகமான தீர்ப்பை நீதிமன்றம் கொடுத்திருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். மேலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், இதுகுறித்து முன்பே என்னுடைய knowledge-க்கு கொண்டு வந்திருக்கிறார்கள். சம்பந்தப்பட்ட அலுவலர்களை அழைத்து பணிகளை முடிக்க உத்தரவிட்டிருக்கிறோம். எனினும், பணிகள் துவங்கப்படாமல் இருந்தால், மீண்டும் ஒருமுறை அதிகாரிகளுடன் கலந்து பேசி, உடனடியாகப் பணிகளைத் துவங்க உத்தரவிடப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.

திருமதி பி. கீதா ஜீவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய கழகத் தலைவர் தளபதியார் அவர்களால் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, 2008 ஆம் ஆண்டு தூத்துக்குடி மாநகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் தொடங்கி வைக்கப்பட்டது. 75 சதவிகிதப் பணிகள் முடிவுற்ற நிலையில், 2011 ஆம் ஆண்டு ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. இப்பொழுது கடந்த 8 ஆண்டுகளாக அந்தப் பணிகள் நிறைவு பெறாமல் திட்டம் பயன்பாட்டிற்குக் கொண்டு வரப்படாததால், நகரத்திலுள்ள மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர்

2020 பிப்ரவரி 19]

அவர்கள், அந்தப் பணிகளை விரைவுபடுத்தி முடித்து, மக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முன்னாள் அமைச்சர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன் இரண்டு நாட்களுக்கு முன்பு இதே பொருள் குறித்துப் பேசினார்கள், தூத்துக்குடி பற்றிதான் பேசினார்கள். அப்பொழுதே நான் அதற்கு பதில் சொல்லியிருந்தேன். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், 2008 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள் 75 சதவிகிதம் முடிவடைந்திருக்கின்றன என்று கூறியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோன்று, பணிகள் முடிவுறாமல் இருந்தால், துறைரீதியாக அதை ஆய்வு செய்து, உடனே தனிக் கவனம் செலுத்தி, அதிகாரிகளை அனுப்பி, அந்தப் பணிகளை விரைவாக முடிக்க கண்டிப்பாக உத்தரவிடப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.*

திரு. கே.என். நேரு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய மேலான கவனத்திற்கு நான் ஒன்றைக் கொண்டு வர விரும்புகிறேன். திருச்சியை* Smart City *என்று அறிவித்திருக்கின்ற காரணத்தால், அங்கே புதிய சாலைகளைப் போடாமல், பூங்காக்கள் அமைத்தல், சாலையோரம் இருக்கின்ற பகுதிகளை அழகுபடுத்துதல் போன்ற பணிகளை மட்டும் செய்து வருகிறார்கள். திருச்சி மேற்கு தொகுதி என்பது விரிவுபடுத்தப்பட்ட பகுதி என்பதால், அதில் புதிய பகுதிகள் பல இணைந்திருக்கின்றன. அங்கு புதிதாக எந்தச் சாலைகளும் போடப்படவில்லை. அதுகுறித்துக் கேட்டபோது, பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளை 2, 3 சிப்பங்களாக நடைமுறைப்படுத்த இருக்கிறோம். சிப்பம் 2–க்கான பணிகளை ஆரம்பித்திருக்கின்றோம். பாதாள சாக்கடைத் திட்டப் பணிகள்*

நடைபெற்று வருகிற காரணத்தினால், சாலைகளைப் போட முடியவில்லை என்று ஆணையாளர் அவர்கள் சொல்கிறார்கள். கிராமப் பகுதியைவிட நகரப் பகுதியிலுள்ள சாலைகளே மிகவும் மோசமாக இருக்கின்றன. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதை கவனத்திலே கொண்டு, அந்தச் சாலைகளை புதுப்பித்துத் தருவார்களா என்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருச்சிராப்பள்ளி மாநகராட்சிப் பகுதியில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கான ஒப்பந்தம் கோரப்பட்டு, 3 சிப்பங்களாகப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2011 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்ததற்குப் பிறகு, முதன்முதலாக திருச்சி மாநகராட்சிக்கு மட்டும்தான் அந்தத் திட்டத்தை அறிவித்தார்கள். அதற்குப் பிறகு, அப்பணிகள் சிப்பம்-1, சிப்பம்-2, சிப்பம்-3 என்று மூன்று பகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் அவர்கள், தற்போது அதுபற்றிதான் கூறினார்கள். பாதாள சாக்கடை திட்டப் பணிகளை ஆரம்பித்து, முழுமையாக முடிக்க முடியாததால்தான், சாலைகளை முழுமையாகப் போட முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. ஒரு street அல்லது 2 streets-ஐ பணிகளுக்காக எடுத்தால், அங்கு பணிகளை முழுமையாக முடித்துவிட்டு, அடுத்த street-ல் பணிகளைத் துவங்கச் சொல்லி உத்தரவு போட்டிருக்கிறோம். அதேபோன்று, எல்லாப் பக்கங்களிலும் pipeline போட்டு முடித்துவிடுவோம். அதற்குப் பிறகு, house connection-ஐ ஒவ்வொருவராக எடுத்துக்கொண்டேயிருப்பார்கள். அப்போது ஒவ்வொரு முறையும், earth work செய்து, சாலைகளைத் தோண்டுவதால், மீண்டும் road damage ஆகிறது. அதற்காக என்ன செய்திருக்கிறோம் என்றால், scheme போடும்போதே, house connection-ஐ அரசாங்கமே கொடுத்துவிட வழிவகை செய்திருக்கிறோம். அதற்கு கட்ட வேண்டிய தொகையும்கூட தவணை முறையில் கட்ட வழிவகை செய்யப்பட்டுள்ளது. தற்போது, சென்னை மாநகராட்சியில், அரசாங்கமே தொகையைச் செலுத்தி, house connection-ஐ

கொடுத்துவிடுகிறது. அவர்கள் அந்தத் தொகையை தவணை முறையில் செலுத்திக்கொள்ளலாம்.

முற்பகல் 10–35

இவ்வாறு திட்டப் பணிகளில் மாறுதல் செய்யப்பட்டு, பாதாள சாக்கடை அமைக்கும் பணிகளின்போது road damage ஆகாமல், திட்டத்தை மேற்கொள்ள அரசாங்கம் வழிவகை செய்திருக்கிறது. பாதாள சாக்கடை அமைக்கக்கூடிய இடங்களில், கண்டிப்பாக இதுபோன்ற சூழ்நிலை இருக்கும். சில பகுதிகளில் பாதாள சாக்கடையை அமைக்கின்றபோது, drainage அமைக்கும்போது, கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செயல்படுத்தும்போது, சுற்றுச் சாலை அமைக்கும்போது கொஞ்சம் தள்ளி அமைக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. ஆனால், இந்த பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பொறுத்தவரையில், நகரின் மையப் பகுதியில்தான் அமைக்க வேண்டியிருக்கிறது. அதாவது 50 வருடங்களாக, 75 வருடங்களாக, 100 வருடங்களாக இருக்கக்கூடிய நகரின் நடுவில்தான் அமைக்கப்பட வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இந்தச் சூழ்நிலை எல்லாம் இருக்கின்ற காரணத்தினால்தான், இந்த மாற்றுத் திட்டத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். திருச்சியில் தனிக் கவனம் செலுத்தி, கண்டிப்பாக பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது 75 சதவிகிதம் பணிகள் முடிந்துவிட்டன என்றும் சொன்னார்கள். அந்தத் திட்டம் 2007–2008–ல் தொடங்கப்பட்ட திட்டம். 98 விழுக்காடு பணிகள் இப்போது முடிவடைந்திருக்கின்றன. இந்த ஆண்டு மே மாதத்தில் அந்தப் பணிகள் முடிவடைந்துவிடும் என்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். எனவே, இந்த ஆண்டு மே மாதத்திற்குள் இந்தப் பணிகள் முடிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் அவர்கள்.

திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள், விருதுநகர், அருப்புக்கோட்டை, சாத்தூர் ஆகிய 3 நகரங்களுக்கும் புதியதாக தாமிரபரணி கூட்டுக் குடிநீர்த் திட்டம் அறிவித்திருக்கிறார்கள். அந்த அறிவிப்பை வெளியிடுகிற நேரத்தில்,

புதியதாக ஒரு scheme–ஐ அறிவித்திருக்கிறார்கள். அந்த அறிவிப்பில் பார்த்தீர்களென்றால், அருப்புக்கோட்டையில் பாதாள சாக்கடைத் திட்டம் எடுத்துக்கொள்ளப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அது தொடர்பாக அரசாணையும் வெளியிடப்பட்டிருக்கிறது. எனவே, இந்த நிதியாண்டிலேயே, அருப்புக்கோட்டையில் இந்தப் பாதாள சாக்கடைத் திட்டம் செயல்படுத்தப்படுமா? ஏற்கெனவே, சாத்தூரிலும், விருதுநகரிலும் பாதாள சாக்கடைத் திட்டம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது. அருப்புக்கோட்டை மட்டும் அதில் விடுபட்டுப்போய் இருக்கிறது. அருப்புக்கோட்டையில் இந்த வருடம் அந்தப் பணி எடுத்துக்கொள்ளப்படுமா என்று மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தங்கள்வாயிலாக நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விருதுநகர் கூட்டுக் குடிநீர்த் திட்டம் என்பது நீண்டகாலமாக எதிர்பார்த்த திட்டம். இதுபற்றி அந்த மாவட்டத்தினுடைய மாண்புமிகு அமைச்சர், அண்ணன் திரு. ராஜேந்திர பாலாஜி அவர்களும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்றிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அங்கே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று சட்டமன்றத்தில் கேட்டிருந்தார்கள். ஆகவே, அந்தத் திட்டம் அந்தப் பகுதி மக்களுக்காக எடுக்கப்பட்டிருக்கிறது. அந்தப் பாதாள சாக்கடைத் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோன்று, இந்த இரண்டு திட்டங்களையும் ஒரே சமயத்தில் நிறைவேற்றக்கூடிய ஒரு சூழ்நிலை வரும்போது, சில சிரமங்கள் ஏற்படும். அதைப்பற்றி, துறைரீதியாக ஆய்வு செய்து, கண்டிப்பாக தகுந்த பதில் அளிக்கப்படும்.

அதேபோல், இதற்கு முன்னால் மாண்புமிகு உறுப்பினர் திரு. நேரு அவர்களுக்கு பதில் சொல்லும்போது சொன்ன திட்டத்தை, நம்முடைய மாண்புமிகு துணை முதலமைச்சர் அவர்களும் சொன்னார்கள். நாங்கள் அறிவித்த திட்டம்தான். அதாவது, பாதாள சாக்கடைத் திட்டப் பணிகளின்போதே, house connection–ஐ எல்லாம் அரசாங்கமே கொடுக்கக்கூடிய

2020 பிப்ரவரி 19]

திட்டம். அதாவது, போடி நகராட்சியில் பார்த்தீர்களென்றால், 20 மாதத்திற்குள் (குறுக்கீடு) 24 மாதத்திற்குள் முடிக்கக்கூடிய திட்டத்தை, 18 மாதத்திற்குள் முடித்திருக்கிறோம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 49, மாண்புமிகு உறுப்பினர் திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

49—

நியாய விலைக் கடைக்குக் கட்டடம்

***35036—திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன்:**

மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்செந்தூர் பேரூராட்சி, 11–வது வார்டு, முத்தாரம்மன் கோயில் தெருவில் நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களின் அனுமதியுடன் திருத்திய விடையை இப்பேரவைக்கு அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) திருச்செந்தூர் பேரூராட்சி, 11–வது வார்டு, முத்தாரம்மன் கோயில் தெருவில் செயல்பட்டு வந்த நியாய விலைக் கடை, 1,029 குடும்ப அட்டைகளுடன் ஆவுடையார்குளம், பாரதியார் தெரு என்ற புதிய முகவரியிலுள்ள வாடகைக் கட்டடத்தில் ஒரு வருடத்திற்கும் மேலாக இயங்கி வருகிறது. திருச்செந்தூர் தேர்வுநிலை பேரூராட்சியின் 11–வது வார்டுக்குள், அதாவது இந்த முத்தாரம்மன் கோயில் தெருவுக்கு உட்பட்ட பகுதிகளில் புதியதாக நியாய விலைக் கடைக்குக் கட்டடம் கட்ட நிலம் கிடைப்பது சிரமமாக உள்ளதால், முத்தாரம்மன் கோயில்